1981 ஏப்ரல் 4]

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது 342 யூனிட் என்று சொன்னார்கள். எந்த எந்த ஜில்லாக்களில் எத்தனை யூனிட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த ஜில்லாக்கள் என்பது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மன்றங்கள் அமைப்பது இன்றைக்கு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன்களிலும் இருக்கக்கூடிய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேல்தட்டு மக்களிடத்திலே போய் இந்த மாதிரியான சங்கங்களை அமைக்கிறார்கள். சாதாரண ஏழை, எளிய அரிசன மக்களிடத்திலே போவதில்லை. தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலே போய், அவர்களிடம் கலந்துரையாடி, அந்த மக்கள் இந்த மாதிரியான மகளிர் மன்றங்கள் அமைத்தால் அவர்கள் பலன் அடைவார்கள்; அவர்களுக்கு உதவியாக இருக்கும். இது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எங்காவது மேல் மட்டத்தில் மகளிர் மன்றங்களுக்கு சேர்த்து இருப்பார்களானால் அந்த விவரங்களை அளித்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கப்பலூரில் உடல் ஊனமுற்றோருக்கான பயிற்சிக்கூடம் ஆரம்பிக்கும் திட்டம்.

*வினா எண் 647 ; திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருமங்கலம் தொகுதி கப்பலூரில் உடல் ஊனமுற்றோருக்கான பயிற்சிக்கூடம் ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டத்திலே கப்பலூரிலும் சேலத்திலும் உடல் ஊனமுற்றோருக்கு இரண்டு பயிற்சிக் கூடங்களைத் துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கும்போது கப்பலூரில் தொழிற்பயிற்சி மற்றும் உற்பத்திக்கூடமாக துவக்கலாம்

எனக் கருத்து தெரிவிக்கப்பட்டது. அந்தக் கருத்தையொட்டி சமூகநலத் துறை இயக்குநரின திருந்திய அறிக்கை எதிர்பார்க்கப் படுகிறது. இயக்குநரின் அறிக்கை வரப்பெற்றவுடன் அரசு விரைவாக முடிவு செய்யும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அமைச்சரவையின் சமூக நலத்துறை அமைச்சராக இருந்த செல்வி பி. டி. சரஸ்வதி **1979** ஆம் ஆண்டு இந்த மானியக் கோரிக்கையிலே பதில் அளிக்கிற நேரததிலே அந்த 2 மாவட்டங்களில் உடல் ஊனமுற்றோருக்கு பயிற்சிக் கூடங்கள் அமைப்பது பற்றி அறிவித்து இருக்கிறார்கள். ஆனால் இப்போது அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது மதுரை திருமங்கலம் பகுதியில் கப்பலூரில் அது ஆரம்பிப்பது பற்றி பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இது உடல் ஊனமுற்றோர் காரியமாக இருப்பதாலும் இது உடல் ஊனமுற்றோர் ஆண்டாக இருப்பதாலும் முன்னாள் அமைச்சர் கொடுத்த வாக்குறுதியாக இருப்பதாலும் விரைவிலே பரிசீலித்து, இந்த ஆண்டு அது வருவதற்கு முயற்சிகளை எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பரிசீலனை விரைவாக செய்யப்பட்டு இந்த ஆண்டு நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு) ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிக்கை.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே தங்களுடைய அறையிலே வந்து பேசியபோது சத்திரப் பட்டியிலே தடியடி நடந்திருக்கிறது, ஒருவர் இறந்திருக்கிறார் என்கிற முக்கிய விஷயமாய்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அறையிலேயே சொன்னேன். தினசரி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் தான் எடுத்துக்கொள்கிறோம். சத்திரப்பட்டி சம்பந்தமாக இன்னும் பதில் வரவில்லை.